**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 14.11.2024**
**O.S. 92/11**
**வா.சா. 1 – சுந்தரலிங்கம்**

**2 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் இரண்டு சொத்துக்களை பட்டிகை சொத்தாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். ஏ பட்டிகை சொத்து 13 சென்று என வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஏ பட்டிகை சொத்து 13 சென்று என காட்டுவதற்கு வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம் வரி ரசீது, அசல் பாக பத்திரம், தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 முதல் 5 நான் சொல்லக்கூடிய வரி ரசீது என்றால் சரிதான். இறுதியாக எந்த வருடத்திற்குள்ள வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1964 ம் ஆண்டுக்குறியதை தாக்கல் செய்துள்ளேன். அதன் பிறகு நாளது தேதிவரை உள்ள வரி ரசீதுகளை நான் தாக்கல் செய்யவிலலை என்றால் சரிதான். ஏ பட்டிகை சொத்து பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் ஏ பட்டிகை சொத்து பட்டா தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வ.சா.ஆ 6 தோராய வரைபடம் நான் தயார் செய்தது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கான ரீசர்வே வரைபடத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கணிணி நகல் ரீசர்வே வரைபடம் புல எண்.261/1 க்கானது என்றால் சரிதான். ஆனால் அந்த வரைபடம் தவறானது அது அசல் ஆவணம்இல்லை. **சாட்சி கணிணி நகல் ரீசர்வே வரைபடம் புல எண்.261/1 க்கானது என ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் ஒரு வழக்கறிஞர் என்றால் சரிதான். பி பட்டிகை சொததின் புல எண் 261/6 என்றால் சரிதான். புல எண் 261/6 க்கான ரீசர்வே வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்ய

வில்லை. புல எண் 261/6 க்கான ரீசர்வே வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். பி.வா.சா.ஆ1 ரீசர்வே வரைபடம் புல எண்.261/1க்கானது தவறு என சொல்லியுள்ளேன் அதன் சரியான வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். பி.வா.சா.ஆ1 ரீசர்வே வரைபடம் புல எண்.261/1 சரியானது நான் வழக்கிற்காக வரைபடம் தவறு என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரீசர்வே வரைபடம் புல எண்.261/1க்கான சரியான வரைபடம் என்னிடம் இருந்திருந்தால் நான் வழக்குறையுடன் அதை தாக்கல் செய்திருப்பேன் என்னிடம் எந்த வரைபடமும் இல்லாததால் தான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எந்த தேதியில் எனது ஏ பட்டிகை சொத்தை ஆக்கிரமித்து ரோடு போட வந்தார்கள் என்றால் 2011ல் காலை 11 மணிக்கு வந்தார்கள் மாதம், தேதி நியாபகம் இல்லை. எத்தனை பேர் வந்தார்கள் என்றால் பஞ்சாயத்து செயல் அலுவலர் மற்றும் இரண்டு உதவியாளர்கள் வந்தார்கள். பஞ்சாயத்து செயல் அலுவலர் மற்றும் இரண்டு உதவியாளர்கள் வந்தார்கள் என எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அதிகாரிகள் வந்ததாக சொல்லியுள்ளேன். 2ம் பிரதிவாதி எனது ஏ பட்டிகை சொத்தை ஆக்கிரமித்து ரோடு போட வரவில்லை நான் அரசாங்க சொத்தை ஆக்கிரமித்து வைத்துள்ளேன் என்றால் இல்லை. எனது செயல்பாட்டால் 2ம் பிரதிவாதி பொதுமக்களுக்காக சாலை போடமுடியாமல் நான் தடுத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏ பட்டிகை சொத்தை எந்த தேதியில் நான் எனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்தேன் என்றால் 1976ம் ஆண்டு. நான் வழக்கில் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்க கூடியது அல்ல எனக்கு எந்த உரிமையும் அதில் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் எனக்கு வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அபிவிருத்தி செய்வதை நான் தடுத்து வைத்துள்ளேன் என்றால்

சரியல்ல. ஆணையரை நியமனம் செய்து பட்டிகை சொத்தை அளந்து திட்டப்படுத்த நான் நடிவடிக்கை எடுக்வில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை பொறுத்து இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**